www.padippakam.com



# யாழ்ப்பாண அரசின் கடை மன்னனும் அவன் ஆட்சியின் இறுதி நாட்களும்

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...




### வரலாற்றுத் தொடர்

31

சங்கிலி குமாரன் பட்டத்து இளவரசனையும், அவனுக்குப் பரிபாலகனாக இருந்த அரச கேசரியையும் கொலை செய்ததையறிந்து கோபங்கொண்ட மக்கள் அவனைச் சிம்மாசனத்திலிருந்து இறங்கும்படி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தனர். அரச பிரதானிகள், படைவீரர்களும் கூட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். சங்கிலி குமாரன் அரச பதவியைத் துறந்து, அவனது மைத்துனனான லியூக்கு குமாரனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சங்கிலி குமாரன் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்ததும், அவனுக்கெதிரான கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய சின்ன மீகாப்பிள்ளை என்பவன், யாழ்ப்பாண இளவரசிகள் சிலரையும் அழைத்துக்கொண்டு மன்னாருக்குச் சென்று போர்த்துக்கேயரிடம் சரணடைந்து, அவர்களது உதவியைக் கோரினான்.

அவன் நல்லூரை விட்டுப் போனதும் மக்களது கலவரங்கள் அடங்கிப் போனது. அதன்பின் ஒருநாள், சங்கிலி குமாரன் திருத்தல யாத்திரைக்காக அரண்மனையை விட்டுப் புறப்பட்ட போது, அவனது அந்தரங்க மந்திரியான அமரக்கோன் முதலியார், 'புலி ஒன்றை அரண்மனைக்குள் விட்டுச் செல்லலாமா' என்று கேட்டான். சங்கிலி குமாரனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.

பின்னர் அமரக்கோன் அவனுக்கு 'லியூக்கு குமாரன்' மக்களின் ஆதரவைப் பெற்றவன், அவனை அரண்மனையில் தனியே விட்டுவிட்டு வெளியே சென்றால் அவனுக்குச் சார்பானவர்கள் அவனை அரசனாக்கி விடுவார்கள்' என்று தான் முதலில் சொன்னதற்கு விளக்கம் சொன்னான்.

அப்போதுதான் உண்மையைப் புரிந்து கொண்ட சங்கிலி குமாரன், அமரக்கோன் முதலியாரிடம் சொல்லி அவரது ஆட்களைக் கொண்டு, லியூக்கு குமாரனின் கண்களைக் குருடாக்கியதோடு, அவனுக்கு ஆதரவானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட முதலியார்மார்களையும், அதிகாரிகளையும் விருந்துக்கென அழைத்து தந்திரமாகக் கொலை செய்வித்தான்

நல்லூர் அரண்மனையில் நிலைமை இவ்வாறிருக்க காலஞ் சென்ற மன்னன் எதிர்மன்ன சிங்கன் கோவாவிலிருந்த போர்த்துக்கேய தேசாதிபதிக்கு அனுப்பிய தூதுக்கு, அவன் கி.பி.1616-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி பதில் அனுப்பினான். இறந்த அரசனின் விருப்பப்படி, அவனது மகனே இளவரசனாக இருக்க வேண்டும் என்றும், அவன் பராயமடையும் வரை அரசகேசரி அவனுக்குப் பரிபாலகனாக இருக்க வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்த அந்தப் பதில், அதே ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் மன்னாருக்கு வந்து சேர்ந்தது.

மன்னாரிலிருந்த போர்த்துக்கேயத் தளபதி, இது பற்றி விசாரிக்கவென சுவான் து குறூஸ் சிறாங் என்பவனை நல்லூருக்கு அனுப்பி வைத்தான். அங்கு சென்று சேர்ந்த அவன், சங்கிலி குமாரனக்கு எதிரான முதலியார்மார்களையும், அதிகாரிகளையும் ஒன்று திரட்டி அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டறிந்தான். அதன் பின் அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு, சங்கிலி குமாரனிடம் சென்று, எதிர்மன்ன சிங்கன் இறக்கும் போது எழுதிய மரண சாசனத்தைத் த்ரும்படி கேட்டான்.

'அவ்வாறு எந்தச் சாசனமும் என்னிடம் இல்லை' என்று சங்கிலி குமாரன் மறுத்துரைத்தான்.

'நீ இவ்வாறு பொய் சொன்னால் எங்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும், எங்களது படை பலத்தைக்கொண்டு உன்னை அழித்து நாங்கள் விரும்புகிறவனக்கு முடி சூட்டவும் நாங்கள் தயங்க மாட்டம்' என்று குறூஸ் சிறாங் அவனை மிரட்டினான்.

அதைக் கேட்டுப் பயந்து போன சங்கிலி குமாரன், அரண்மனையில் ஏற்பட்ட கலவரத்தில், எதிர்மன்ன சிங்கனின் மகன் இறந்து விட்டான் என்றும், அவனுக்குப் பதிலாக போர்த்துக்கேயர்கள் யாரை இளவரசனாக்க சிபார்சு செய்கிறார்களோ, அதைத் தான் ஏற்றுக் கொண்டு, அவனுக்குப் பரிபாலகனாக இருக்கச் சம்மதிக்கிறேன், என்றும் வாக்குக் கொடுத்தான்.


அதை ஏற்றுக் கொண்ட சிறாங், அங்கிருந்த முதலியார்களிடமும், அதிகாரிகளிடமும் 'யாரை இளவரசனாக்கலாம்' என்று ஆலோசனை கேட்டான்.

அவர்கள் போர்த்துக்கேயரால் முன்பு கொல்லப்பட்ட புவிராச பண்டாரத்தின் மகனும், அவர்களால் வளர்க்கப்பட்டு கிறிஸ்தவப் பெயர் சூட்டப்பட்ட லியூக்கு குமாரனக்கே இளவரசுப் பட்டம் கட்டும்படி கூறினார்கள்.

அதற்குச் சம்மதித்த சிறாங், லியூக்கு குமாரனே இளவரசன் என்று ஏற்றுக்கொள்வதாக சங்கிலி குமாரனிடமும் எழுத்து மூல ஒப்புதல் பெற்றுக்கொண்டு மன்னாருக்குத் திரும்பினான்.

இதற்கிடையில் போர்த்துக்கேயரை ஏதிர்ப்பதற்கு தஞ்சாவூர் அரசனிடம் படை உதவி பெறுவதற்காக, யாழ்ப்பாணத்திற் கூடாக தமிழ்நாட்டிற்கு செல்வதற்கு வந்த சிங்கள சிற்றரசன் ஒருவனை சங்கிலி குமாரன் போகவிடாமல் தடுத்துத் திருப்பி அனுப்பி விட்டான்.

இதை அறிந்து பெரு மகிழ்ச்சி கொண்ட போத்துக்கேயரின் கோவா தேசாதிபதி, சங்கிலி குமாரனைப் பாராட்டி அவனை அரச பரிபாலகனாக தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும், சிங்கள அரசனை தமிழ் நாட்டிற்கு செல்ல விடாமல் தடுத்து திருப்பி அனுப்பியது



போல் தமிழ்நாட்டிலிருந்தோ அல்லது இந்தியாவின் வேறு பாகங்களில் இருந்தோ தங்களின் அனுமதியில்லாமல் வரும் எவரையும், அவர்கள் யோகிகள்- யாத்திரிகர்களாக இருந்தாலும்கூட இலங்கைக்கு வர விடாமல் தடுத்து திருப்பி அனுப்பி விட வேண்டும் என்றும் சொல்லி அனுப்பினான்.

போர்த்துக்கேயரின் அங்கீகாரம் பெற்றதும் சங்கிலி குமாரனது நடவடிக்கைகள் சகிக்க முடியாத அளவுக்கு மக்கள் நலனுக்கு எதிராகச் செல்ல ஆரம்பித்தது. பழையபடி மக்கள் கொந்தளிக்க ஆரம்பித்தனர். பல முதலியார்மாரும் அதிகாரிகளும் மக்கள் பக்கம் சேர்ந்து கொண்டு அவனை எதிர்க்கத் தொடங்கினர். போர்த்துக்கேயரிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாக சங்கிலி குமாரன் இரகசியமாக தன் மருமகனை அரசனாக்க முயற்சித்தான். இதனால் நல்லூர் அரச குமாரிகள் பலரும் அவன் மேல் அதிருப்தி கொண்டு மக்கள் பக்கம் சேர்ந்தனர். சங்கிலி குமாரன் அரச குடும்பப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளாமல் வேறு குலப் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்திருந்தது அவர்களது கோபத்தை இன்னும் அதிகமாக்கியது.

ஒரு நாள் நண்பகலில் ஆவேசம் கொண்ட மக்கள் ஆயுதபாணிகளாக அரண்மனைக்குள் பிரவேசித்து, இளவரசனான லியூக்கு குமாரனையும் அரச கேசரியைக் கொலை செய்த கொலைகாரனையும் தம்வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அவனோடு இருக்கும் தாசிப் பெண்களைத் துரத்திவிட்டு அரச குடும்பப் பெண் ஒருத்தியை அவன் திருமணம் செய்ய வேண்டும் என்றும் கோசமிட்டனர்.

அவர்கள் இருந்த ஆவேச நிலையைக் கண்டு பயந்து போன சங்கிலி குமாரன் அரண்மனையின் மேல் மாடத்துக்குச் சென்று கண்கள் குருடாக்கப் பட்ட நிலையில் இருந்த லீக்கு குமாரனை அங்கிருந்த சாளரத்தின் வழியாகத் தூக்கிக் காட்டினான். மக்கள் இளவரசர் வாழ்க என்று கோசமிட்டுக் கொண்டு அவனை நிலத்தில் விழுந்து வணங்கினர்.

இது இவ்வாறு இருக்க, அரச கேசரியைக் கொலை செய்த அமரக்கோன் முதலியாரையும் அவனது ஆட்களையும் தந்திரமாகப் பின் கதவால் தப்பிச் செல்லுவதற்கு சங்கிலி குமாரன் ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் இந்த ஏற்பாடு மக்களுக்குத் தெரிந்து விட்டது. அவர்கள் ஆவேசத்தோடு அரண்மனைக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து அமரக்கோன் முதலியாரைப் பிடித்துவிட்டார்கள். அவனது கழுத்தில் கயிற்றைப் போட்டு வீதி வீதியாக இழுத்துச் சென்றார்கள்.

சங்கிலி குமாரனுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தை அறிந்த போத்துக்கேயர்கள் இரு பகுதியினரையும், சமாதானப்படுத்துவதற்கென்று ஒரு தூதுவனை அங்கு அனுப்பி வைத்தார்கள். அவன் அங்கு சென்று இரு தரப்பாராயும் சந்தித்துப் பேசியும் எந்தப் பிரயோசனமும் ஏற்படவில்லை.

மக்கள் தொடர்ந்து கலகம் செய்தவண்ணமே இருந்தார்கள். ஏராளமான போர் வீரர்களும் மக்கள் பக்கம் சேர்ந்து விட்டதால் அரண்மனைக்கு உள்ளேயே சங்கிலி குமாரனுக்கு பாதுகாப்பு இல்லாமல்போய் விட்டது. பயந்துபோன அவன் தனது மனைவிமாரை தஞ்சாவூர் அரசனிடம் சென்று படையுதவி கேட்டுவருமாறு அனுப்பிவிட்டு, தான் ஊர்காவற்துறையில் இருந்த கிறிஸ்தவக் குருமார்களின் மடத்தில் சென்று தஞ்சமடைந்துகொண்டான்.

தஞ்சாவூருக்குச் சென்ற அவனது மனைவிமார் தஞ்சை அரசனிடம் போர்த்துக்கேயர்கள் தமக்குப் பல விதத்திலும் தொல்லையும் நெருக்கடிகளும் தருகிறார்கள் என்று சொல்லி அழுதார்கள். போர்த்துக்கேயரைத் துரத்துவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருந்த தஞ்சை அரசன், அவர்கள் நிலையைக் கண்டு இரங்கி தனது படைப் பிரிவு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தான்.

அவ்வாறு, தஞ்சாவூரில் இருந்து வந்த படைகளுடன் சங்கிலிகுமாரன் தனக்கு சார்பான படைகளுமாக 5000 பேர் கொண்ட ஒரு படையை 'வர்ணகுலத்தான்' என்பவனின் தலைமையில் திரட்டிக்கொண்டு நல்லூருக்குச் சென்று, தனக்கு எதிராகக் கலகத்தினைத் தூண்டிவிட்ட முதலியார்களினதும்-அதிகாரிகளினதும் தலைகளை வெட்டி அவர்களைக் கொன்று விட்டான். இதனால் பயந்து போன மக்கள் கலகத்தைக் கைவிட்டு அடங்கிப்போயினர்.

ஆனால், மக்களின் கலகம் அடங்கிப்போய் விட்டாலும், அதை அடக்க அவன் தஞ்சாவூர்ப் படையை உதவிக்கு அழைத்தது போர்த்துக்கேயருக்கு அடக்க முடியாத கோபத்தை உண்டாக்கி விட்டது. அவன் வேஷம் போட்டு தங்களை ஏமாற்றி வருவதாக அவர்கள் நினைத்தார்கள். அதனால் அவனைத் தண்டிக்க வேண்டும் அல்லது ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்ற வேண்டும் என்று முடிவு செய்தனர்.

அவன் கண்டி அரசனுக்கு உதவி செய்கிறான், மூன்று வருடங்களாகத் திறை செலுத்தவில்லை, தங்களது கப்பல்களைச் சூறையாடும் முஸ்லிம் கடற்கொள்ளைக்காரன் ஒருவனுக்கு உதவி செய்கிறான் என்றெல்லாம் அவன் மீது குற்றச் சாட்டுக்களைச் சுமத்தினார்கள்.

இவற்றை விசாரிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு பிலிப் டு ஒலிவேரா (PHILIP DE OLIVEIRA) என்பவனின் தலைமையில் ஒரு பெரும் படையை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தனர்.

(தொடரும்)

- நக்கீரன்